# சீரற்ற காலநிலை காரணமாக 19,202 பேர் பாதிப்பு
# மக்களை அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்தது

கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலையினால், மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் 5697 குடும்பங்களைச் சேர்ந்த 19,202 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நிலவும் காலநிலை காரணமாக நாடு முழுவதும் 361 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மேலும் மூன்று வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

508 குடும்பங்களைச் சேர்ந்த 1589 பேர் 20 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த காலநிலை காரணமாக பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, திருகோணமலை, அம்பாறை, நுவரெலியா மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய குறிப்பிட்டுள்ளது. பலத்த காற்று, வெள்ளம் மற்றும் வேரோடு சாய்ந்த மரங்கள் மற்றும் மண்சரிவு ஆகிய காரணங்களினால் மேற்படி சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மகாவலி ஆறு மற்றும் மெனிக் மாணிக்க கங்கை ஆகிய பகுதிகளை சூழவுள்ள தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரெத-05)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை 02.01.2024 கதிர் 149



நாளை வருகிறது மிதிவெடி!

கண்ட கண்ட இடத்தில் எல்லாம் கால், கை வைப்பவர்கள் அவதானமாக இருந்துகொள்ளுங்கள்!

உங்களுக்கு சம்பந்தம் இல்லாத இடங்கள், பொருட்கள், அதிகாரங்கள் மற்றும் பதவிகளுக்கு ஆசைப்படுபவர்கள் அடையாளப்படுத்தப்படுவர்!


## 2024 ஜனவரி மாதம் முதலாக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இறைவரி இலக்கம் அவசியம்!

2024 ஜனவரி மாதம் முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவு இலக்கமான ரின் (Taxpayer Identification Number) இலக்கத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் வரி செலுத்துவோருக்கான பதிவு இலக்கத்தை (TIN) பெறாத நபர்களுக்கு 50,000 வரை அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கமொன்று இருப்பதைப் போலவே TIN இலக்கம் இருக்க வேண்டியதும் அவசியமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்தக் கூடிய அளவிலான வருமானம் இருக்குமாயின் அவர்கள் வரி செலுத்த வேண்டும் என்றும் அதற்காக அவர்களுக்கான வரிக் கோப்பும் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் 1,200,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் நபர்கள் வருமான வரிக் கோப்பை திறக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் www.ird.gov.lk என்ற இணையத்தில், தபால் மூலம் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நேரில் பதிவு செய்து தமக்கான இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (04)

## யானை - மொட்டு கூட்டணியின் பொது வேட்பாளர் சம்பிக்கவா?



மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ச அல்லாத ஒருவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப்பதவிக்கு வரவேண்டும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின்

2►

## A/L பரீட்சை நாளை மறுதினம் ஆரம்பம்! 2,258 பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிப்பு

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியுமெனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு 346,976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 281,445 பேர் பாடசாலை மாணவர்கள் என்பதுடன், 65,531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடளாவிய ரீதியில் 2,258 பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அதேவேளை, இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக முதல் முறையாக கொரிய மொழி பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## 2024 ஆண்டு உற்பத்திகளுக்கே வற் வரி அதிகரிப்பு பொருந்தும்

நாட்டில் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள 18 வீத வற் வரியானது, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்குக் கொண்டுவரப்படும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் மாத்திரமே பொருந்தும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில், 2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் சந்தையில் உள்ள பொருட்களுக்கு இந்த அதிகரித்த வற் வரி பொருந்தாது என அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

எனவே, சந்தையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், தன்னிச்சையாக விலைகளை அதிகரிக்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகார சபை குறிப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோறல, வற் வரியால், நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள்

2►

## பருத்தித்துறை தீ விபத்தில் இருவர் பரிதாப உயிரிழப்பு

### சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணை



யாழ்ப்பாணம், பருத்தித்துறை முனைப் பகுதியில் களஞ்சியசாலையொன்றில் தீப் பற்றி இருவர் உயிரிழந்துள்ளமை தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டார்.

குறித்த சம்பவம் இன்று செவ்வாய்க் கிழமை அதிகாலை

2►

## வற் வரியால் ரணிலும் விரைவில் கவிழுவார்

### இராதாகிருஷ்ணன் ஆருடம்



"கோட்டாபய ராஜபக்ச அன்று வற் வரியைக் குறைத்து தனது பதவியை இழந்தார். ரணில் விக்கிரமசிங்க இன்று வற் வரியை அதிகரித்து தனது பதவியை இழக்கப் போகின்றார். வற் வரி அதிகரிப்பையே இந்த அரசு மக்களுக்குப் பரிசாக வழங்கியுள்ளது." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

2►

# மழைக் காலம் ஆரம்பமாகும்போதே டெங்கைக் கட்டுப்படுத்த வேண்டும்!

## யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி வைத்தியர் சுரேந்திரகுமாரன்

தொற்று நோயானது உச்ச கட்டத்தை அடைந்த பின்னரே படிப்படியாக குறைவடையும். எனவே, எதிர்வரும் காலத்திலாவது டெங்கு நோயை மழை காலம் ஆரம்பமாகும் போதே கட்டுப்படுத்துவதற்கு முற்பட வேண்டும் என சமுதாய வைத்திய நிபுணரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதியுமான சுரேந்திரகுமாரன் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்படுத்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதைய காலப் பகுதியில் டெங்கு மற்றும் சுவாசம் சம்பந்தமான நோய்கள் மக்கள் மத்தியில் பரவி வருகின்றன. முக்கியமாக டெங்கு நோய் யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதிகளில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது

டெங்கு எமது பகுதியில் மழை காலப்பகுதியில் வருடா வருடம் தாக்கத்தை ஏற்படுத்துவது தொடர்ந்து நடைபெறுகின்ற விடயம்.

இதனை சரியான முறையில் கையாளும்போது டெங்கு ஏற்படாமல் ஆரம்பத்திலேயே தடுக்க முடியும். இது எங்களுடைய அன்றாட பழக்கவழக்கத்தில் தங்கி இருக்கின்றது.

எனவே, தேவையற்ற பொலித்தீன் பாவனை பிளாஸ்டிக் பாவனையைத் தவிர்த்து, தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய சிரட்டைகளில் இருந்து டயர்கள் மற்றும் ஏனைய விடயங்களை கிரமமாக மழை காலத்திற்கு முதல் அகற்ற வேண்டும்.

குறிப்பாக, தற்போது இந்த டெங்கு நோயானது உச்சக்கட்டத்தை தாண்டி உள்ளது. ஆனால், நோய் உச்சக் கட்டத்திற்கு போன பின்னர்தான் டெங்கை கட்டுப்படுத்த வேண்டும் என முனைகின்றோம்.

உண்மையாக இதனை கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் மழைக்காலத்துக்கு முதலே இந்த வேலை திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு தொற்று நோயானது உச்ச கட்டத்தை அடைந்த பின்னரே படிப்படியாக குறைவடையும். எனவே எதிர் வரும் காலத்திலாவது டெங்கு நோயை மழை காலம் ஆரம்பமாகும் போது கட்டுப்படுத்துவதற்கு முற்பட வேண்டும், என்று அவர் தெரிவித்தார். (01)

## கலங்கரை தீபங்களுக்கு கௌரவிப்பு விழா!



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி பயின்று 1997ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தமது ஆசிரியர்களின் உன்னத சேவைகளைப் பாராட்டும் பொருட்டு ஒழுங்கு செய்திருந்த கலங்கரை தீபங்களுக்கான கௌரவிப்பு விழா அட்டாளைச்சேனை யாடோ விடுதி மண் டபத்தில் (01) நடைபெற்றது.

மேற்படி மாணவர் குழாமின் நடப்பாண்டுத் தலைவரும் மொரட்டுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி றிஸ்வி நூர்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தரம்-1 முதல் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி போதித்த 55 ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், நிகழ்வின் ஞாபகார்த்தமாக கலங்கரை தீபங்கள் எனும் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## அலரி மாளிகைக்கு அருகே தீப்பற்றிய முச்சக்கர வண்டி

கொள்ளுப்பிட்டி சந்திக்கு அருகில் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று நேற்று (01) பிற்பகல் தீப்பிடித்து எரிந்துள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி முச்சக்கர வண்டியில் பயணித்த ஒரு பெண் உட்பட மூன்று குழந்தைகள் உடனே வெளியே குதித்து உயிர் பிழைத்தனர். கொழும்பு நோக்கிச் செல்லும் பாதையில் பயணித்த முச்சக்கரவண்டி அலரி மாளிகைக்கு அருகாமையாக சென்று கொண்டிருந்த போது முச்சக்கர வண்டியின் பின் புறத்தில் திடீரென தீ பரவியதாகவும், கொழும்பு மாநகரசபையின் தீயணைப்பு வாகனம் விரைந்து வந்து தீயை முற்றாக அணைத்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த முச்சக்கரவண்டி பாலாவி பகுதியைச் சேர்ந்த ஒருவருடையது எனவும், தொழிநுட்பக் கோளாறே தீ விபத்துக்குக் காரணம் என சந்தேகிக்கப் படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரெத-07)

## 2024 ஆண்டு உற்பத்திகளுக்கே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிசமாக அதிகரித்துள்ளன என்றும் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இது நாட்டின் கிராமப்புற மக்களை விட நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரையும், வறிய மக்களையுமே அதிகம் பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (04)

## வற் வரியால் ரணிலும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சந்திரசேகரனின் 14 ஆவது சிராந்த்த தின நிகழ்வு நேற்று ஹட்டனில் உள்ள ம.ம.முவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றி இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

“விலை அதிகரிப்பு, பொருள்கள் தட்டுப்பாடு போன்ற செய்திகளே புத்தாண்டில் வெளிவருகின்றன. இந்நிலையில், வற் வரி அதிகரிப்பால் நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். ஏனையவர்களுக்கும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் தேர்தல் வருடம், இந்த அரசை விரட்ட மக்கள் தீர்மானித்துவிட்டது. எனவே, தோல்விக்காக இந்த அரசு காத்திருக்கின்றது என்றே கூற வேண்டும். - என்றார். (அ)

## பருத்தித்துறை தீ விபத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை கடற்றொழில் உபகரண களஞ்சியசாலையில் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இருவரும் களஞ்சியசாலையில் சென்று கதவைப் பூட்டி விட்டு நித்திரைக்குச் சென்றபோதே அதிகாலை 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து அருகில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்டபோதும், களஞ்சியசாலையில் உறக்கத்தில் இருந்த இருவரும் உடல் கருகி பலியானதுடன் அங்கிருந்த பொருட்களும் தீயில் எரிந்ததால் அருகில் இருந்த வாகன தரிப்பிடத்திலும் தீப்பரவி சேதமடைந்தது.

மலையகத்தின் உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களான வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 46 வயதானவரும், வேலாயுதம் ரவி என்ற 38 வயதானவருமே உயிரிழந்துள்ளனர்.

களஞ்சியசாலையில் இருந்த சிலிண்டர் தீ விபத்துக்கு காரணமாக இருக்குமா? எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிஷாந்தன், தடயவியல் பொலிஸார், பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## யானை - மொட்டு கூட்டணியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையுடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் பொதுவேட்பாளராக களமிறங்கவுள்ளதாக சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவலில் எவ்வித உண்மையும் இல்லை.

எமது அரசியல் கொள்கை பற்றி தெரிந்த மக்களுக்கு இது பொய் என்பது தெரியும். எனினும், இதனை வைத்து எதிர்காலத்திலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப் படலாம் என்பதால்தான் நிராகரிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகளை கடுமையாக 2014 இலேயே விமர்சித்தவன் நான். நாடு வங்குரோத்து அடையும் என அன்றே கூறியிருந்தேன்.

நாட்டை வங்குரோத்து அடைந்ததரப்புடன் நாம் இணையமாட்டோம். எனவே, மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ச அல்லாத ஒருவரிடம் மொட்டு கட்சி தலைமைப்பதவி வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் அரசியல் உறவு கிடையாது. அவருடனும் அரசியல் கூட்டணி அமைக்கமாட்டோம்.” - என்றார். (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்



# கல்முனை ஆதார வைத்தியசாலையில் புதுவருட கடமைகள் ஆரம்ப நிகழ்வு



(வி.ரி. சகாதேவராஜா)

புதிய ஆண்டில் கடமைகளை ஆரம்பிக்க சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வு அரச சுற்றுநிருபத்துக்கமைவாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று நடைபெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தேசிய கொடியேற்றல் மற்றும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. மேலும் பணிப்பாளரினால் வைத்தியசாலையின் எதிர்கால திட்டங்கள் செயல்பாடுகள் பற்றி உரையாற்றப்பட்டது.

வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

## கிழக்கின் கேடயத்தின் நிவாரண உதவி அயலவர்களுக்கு உதவுவோம்! - 3ம் கட்டம்



(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கன மழை காரணமாக பல குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உதவும் வகையில் அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கு "அயலவர்களுக்கு உதவுவோம் - மூன்றாம் கட்டம்" திட்டத்தின் கீழ் அரிசி பொதிகள் கிழக்கின் கேடயத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மூலம் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸின் சொந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர்ச்சியான மழை காரணமாக பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள், தொழில் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற குடும்பங்கள், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு இந்த பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த கொரோனா தொற்று காலத்திலும் ஜனாஸா நல்லடக்கம், நிவாரணப்பணி, என பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்த கிழக்கின் கேடயம் அமைப்பு, அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 1000 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை கொரோனா தொற்று காலத்திலும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிழக்கின் கேடயத்தின் தன்னார்வ தொண்டர்கள் அரிசிப் பொதிகளை, கொட்டும் மழையில் அடையாளம் காணப்பட்டவர்களிடம் பகிர்ந்தளித்து வருகின்றனர்.

## ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பினால் பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் உன்னதமிக்க சேவையின் பலனாக புதிய இல்லம் மற்றும் மலசல கூடம் என்பவற்றை நிர்மாணித்து, பயன்பெறும் குடும்பத்தினரிடம் வழங்கி வருகின்றது.

அந்த வகையில் மட்டுநகரைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸ் தேசத்தில் வசிக்கின்றவருமான நவநாதன் நவநீதன் சொந்த நிதியில் நிர்மாணிக்கின்ற 2 ஆவது இல்லம், ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் 97 ஆவது இல்லமாக பயன்பெறுநரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வில்லமானது கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுனதீவு பிரதேசத்திற்குட்பட்ட நரிபுல் தோட்டம் எனும் கிராமத்தில் பல்வேறு இன்னல்களுடன் வாழ்ந்து வருகின்ற குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பலியானோர் எண்ணிக்கை உயர்ந்தது!



ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானின் மேற்கு கடற்கரைப் பகுதியையொட்டிய இஷிகவா தீவு மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில் திங்கள்கிழமை பிற்பகலில் தொடர்ச்சியாக 20 க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று ரிச்டர் அளவில் 7.6 அலகுகளாகப் பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலிருந்து சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி அமைந்துள்ளது. தொடர் நிலநடுக்கங்களைத் தொடர்ந்து இஷிகவா தீவுக்கு தீவிர சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேற்கு கடற்கரைப் பகுதியையொட்டிய ஹோன் உள்ளிட்ட பிற பகுதிகளுக்கும் ஹோக்காய்டோ உள்ளிட்ட ஜப்பானின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள பிரதான தீவுகளுக்கும் குறைந்த அளவிலான சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர் நிலநடுக்கம் காரணமாக மேற்கு கடற்கரையையொட்டிய நகரங்களின் பல பகுதிகளில் சாலைகள், ரயில் பாதைகள் கடுமையாகச் சேதமடைந்தன.

தொலைத்தொடர்பு கோபுரங்கள் சேதமடைந்துள்ளதால், பல பகுதிகளில் கைப்பேசி சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் புகார் தெரிவித்தனர். ஜப்பானின் மேற்கு கடற்கரையையொட்டிய பகுதிகளில் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி சாலையில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலையில் இஷிகாவாவில் இதுவரை 30 பேர் இறந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ஏழு பேர் படுகாயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. அதேநேரத்தில் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் உடனடியாக மதிப்பிட முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (04)

# பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் இம்ரான்கான் வேட்பு மனு நிராகரிப்பு



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

தெஹ்ரிக்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் தலைவரான இம்ரான்கான் கடந்த 2018 முதல் ஏப்ரல் 2022 வரையில் பாகிஸ்தான் பிரதமராக பதவி வகித்தார். இவர் தனது பதவிக் காலத்தில் வெளிநாட்டு தலைவர்களிடம் இருந்து பெற்ற பரிசுப் பொருட்களை, அரசு கருவூலத்தில் ஒப்படைக்காமல் அவற்றை விற்று சொத்து சேர்த்ததாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது .

இதை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இம்ரான்கானுக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறை தண்டனைக்கு இடைக்கால தடை விதித்தது.

இதனிடையே, பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய ரகசிய தகவல்களை கசியவிட்டதாக கூறி தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கான் மீண்டும் கைது செய்யப்பட்டார். இதனால், அவர்தொடர்ந்து சிறையில் உள்ளார். அத்தோடு, இம்ரான்கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதித்து அந்நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

இந்நிலையில் வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் பிடிஐ கட்சி சார்பில் இம்ரான்கான் சிறையில் இருந்தபடியே போட்டியிடுவார் என தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து லாகூர், மியான்வாலி ஆகிய 2 தொகுதிகளில் இம்ரான்கான் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில், இம்ரான்கானின் 2 வேட்பு மனுக்களையும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது. ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர் என்பதால் இம்ரானின் வேட்பு மனுக்களை நிராகரித்ததாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (04)



# நோபல் பரிசைப் பெற்றவருக்கு பங்களாதேஷில் 6 மாதம் சிறை

பங்களாதேஷைச் சேர்ந்த முகமது யூனுஸ், 'கிராமீன் கம்யூனிகேஷன்ஸ்' என்ற வங்கியை தொடங்கி, லட்சக்கணக்கான கிராமப்புற தொழில் முனைவோருக்கு கடன்களை வழங்கினார். அவரது பொருளாதார சிந்தனைக்காக கடந்த 2006 ஆம் ஆண்டில்அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கடந்த 2007 இல் முகமது யூனுஸ் அரசியலில் கால் பதித்தார். இதனால் கடந்த 2011ஆம் ஆண்டில் கிராமீன் கம்யூனிகேஷன்ஸ் வங்கியின் தலைவர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, தொழிலாளர் சட்ட விதிமீறல் தொடர்பாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த தொழிலாளர் நீதிமன்றம் யூனுஸ்ுக்கு 6 மாதம் சிறைத் சிறைதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

அவர் தரப்பில் பிணை கோரப்பட்டது. இதை பரிசீலித்த நீதிமன்றம் அவருக்கு ஒரு மாதம் பிணை வழங்கியது. தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்படும் என்று யூனுஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தென் கொரிய எதிர்க்கட்சித் தலைவர் கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயம்!

தென் கொரியாவின் எதிர்க்கட்சித் தலைவர் லீ ஜே மியுங்கை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நேற்று கத்தியால் குத்தியதில் அவர் படுகாயமடைந்தார்.

தென் கொரியாவின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் தலைவர் லீ ஜே மியுங்(வயது 59), புசானின் கதியோக் தீவில் கட்டப்பட்டு வரும் புதிய விமான நிலையப் பணிகளை நேற்றுக் காலை பார்வையிடச் சென்றிருந்தார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, கூட்டத்தில் இருந்த அடையாளம் தெரியாத நபர் லீ ஜே மியுங்கின் கழுத்தின் இடது பகுதியில் குத்தியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த லீ ஜே மியுங், சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். அவரை மீட்ட பாதுகாப்பு வீரர்கள் அருகிலிருந்த மருத்துவமனையில்



அனுமதித்துள்ளனர்.

மருத்துவமனையில் லீ ஜே மியுங்கிற்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், தாக்குதல் நடத்திய நபரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தென் கொரியா அதிபர் தேர்தலில் போட்டியிட்ட லீ, மிக குறைவான வாக்கு வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது. (04)

# 2024 ஆம் ஆண்டு முழுவதும் காஸாவில் போர் தொடரும்!

இந்த 2024 ஆம் ஆண்டு முழுவதும் காஸாவில் போர் தொடரும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் டானியல் ஹகாரி வெளியிட்டுள்ள புத்தாண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் ஹமாஸ் அமைப்பினருடனான போர் இந்த 2024 ஆம் ஆண்டு முழுவதும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போரில் இஸ்ரேல் தனது இலக்குகளை எட்டுவதற்கு நீண்ட காலம் போரிட வேண்டியுள்ளது. அதற்கு ஏற்ற வகையில் போர் வியூகங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியாக, களத்தில் பணியாற்றி வரும் 3 லட்சம் உதவிப்படை வீரர்கள் வரும் வாரங்களில் திரும்ப



அழைக்கப்படவுள்ளனர். அவர்களில் ஏராளமானவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

இதன் மூலம், போர் காரணமாக இஸ்ரேல்பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் குறிப்பிடத்தக்க அளவில் குறையும். நமது பலத்தை மேலும் பெருக்கிக் கொண்டு, இந்த ஆண்டு தொடரவிருக்கும் போரை மேலும் திறம்படக் கையாள்வதற்கு இது உதவும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

# இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறி பூர்த்தி செயதோருக்குப் பிரியாவிடை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவத்தினால் நடாத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு கடந்த ஞாயறன்று சாய்ந்தமருது கலாசார நிலைய மண்டபத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் (கலாநிதி) ரமீஸ் அபூபக்கர், கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் நிதி உதவியாளர் எம்.எஸ்.எம். றியாஸ், விஷேட அதிதிகளாக தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவத்தின் சிங்கள மொழிக் கற்கை நெறிக்கான வளவாளரும் திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பி. சந்திரகுமாரி, தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவத்தின் சிங்கள மொழிக் கற்கை நெறிக்கான வளவாளர், மொழி பெயர்ப்பாளர், கல்முனை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.பி. ஆமினா ஆகியோர் கலந்து கொண்டனர்.

18 நாட்களாக இடம்பெற்ற இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியினை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களினால் சிங்கள மொழியினை அடிப்படையாக கொண்ட கலை கலாசார மேடை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

# திருகோணமலை குச்சவெளி மாணவர் கௌரவிப்பு விழா





(ஹஸ்பர்)

திருகோணமலை குச்சவெளி அஹதியா பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி மாணவர் கௌரவிப்பும் பட்டமளிப்பு விழாவும் குச்சவெளி பிரதேச செயலக மண்டபத்தில் இன்று நடைபெற்றன.

அஹதியா பாடசாலையின் அதிபர் முஹம்மது சிபுனிஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் டீன் பவுண்டேசனின் தலைவர் முஹம்மது ஆதில், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர். அரியரத்தினம், பௌத்த சமய குரு, இந்து சமய குரு, மௌலவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள், அக்கா போட்டு சாதாரண தரச்சியில் சித்தி அடைந்த மாணவர்கள், தரம் ஐந்து புலமை பரிசில் பரிட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள், அஹதியா பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு சின்னங்களும் சான்றிதழ்களும் வழாங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை கல்வி வலயத்தில் சத்தியப்பிரமாண நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

புதிய கல்வியாண்டிற்கான சத்தியப்பிரமாணமும், நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற போது வலயக் கீதம் இசைக்கப்பட்டு வெளியீடும் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கணக்காளர் வை. ஹபீபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபிர், எம்.எச். றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப், என்.வருண்யா அடங்கலாக வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தேசியக் கொடியையும் கணக்காளர் வை. ஹபீபுல்லா மாகாணக் கொடியையும், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் வலயக் கொடியையும் ஏற்றி வைத்தார்கள். நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். முகம்மட் சாஜித் புதிய ஆண்டுக்கான சத்தியப் பிரமாணத்தை ஒப்புவித்தார்.

1994 ஆம் ஆண்டு கல்முனை கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 12 வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பதவி வகித்துள்ளனர். முப்பது ஆண்டுகளின் பின்னர் முதன் முறையாக வலயக் கீதம் இயற்றி இசைக்கின்ற செயற்பாடு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமின் முயற்சியின் பிரதியீடாக நிறைவேற்றப்பட்டுள்ளது.




# கற்பிட்டி பிரதேச சபை புத்தாண்டு நிகழ்வுகள்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச சபையின் புத்தாண்டு நிகழ்வும் முதல் நாள் பணி ஆரம்பத்திற்கான சத்தியப்பிரமாண வைபவமும் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் இடம்பெற்றன.

மூன்று மதத் தலைவர்களினாலும் தேசியக் கொடி மாகாண கொடி மற்றும் பிரதேச சபைக் கொடிகளும் அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றியும் ஆரம்பிக்கப்பட்ட புத்தாண்டு நிகழ்வில் பிரதேச சபையின் செயலாளரினால் இவ்வாண்டுக்கான சத்தியப் பிரமாணமும் இடம்பெற்று, முதல் நாள் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

# வயோதிபத் தம்பதி சடலங்களாக மீட்பு

கொஸ்லாந்தை வெலன்விட்ட நூறு ஏக்கர் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் வயோதிபத் தம்பதியினர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கொஸ்லாந்தை, வெலன்விடவில் வசித்து வந்த 70 வயதுடைய ஆணும், 60 வயதுடைய பெண்ணுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டில் வயோதிபத் தம்பதியினர் தனியாக வசித்து வந்துள்ளனர். வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த இவர்களது மகள் புத்தாண்டில் பெற்றோரைப் பார்ப்பதற்காக நேற்று வீட்டிற்கு வந்தபோது அவர்கள் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு மகள் அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்த பெண் வீட்டுக்கு மின்சாரம் வழங்கும் மின்சார வயரைப் பிடித்துக் கொண்டு இறந்து கிடந்தது தெரியவந்தது.

வீட்டுக்கு அருகில் இருந்த மரமொன்றை குறித்த பெண் வெட்டியபோது அது மின் கம்பியில் விழுந்து வயர் உடைந்துள்ளது. கம்பியை அகற்றச் சென்றபோது மின்சாரம் தாக்கி பெண் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர் .

அதேவேளை, வீட்டில் இருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் வீட்டுக்குச் செல்லும் வீதியில் கணவரின் சடலம் காணப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இருவரினதும் மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது என்றும் பொலிஸார் கூறினர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹன, கொஸ்லந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஓ.பி. துமிந்த விக்கிரமசிங்க ஆகியோரின் ஆலோசனையின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எலுமிச்சையின் விலை பாரியளவில் குறைவு



சந்தையில் எலுமிச்சை விலை வேகமாக குறைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். பேலியகொட மற்றும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையங்க ளில் ஒரு கிலோ சுண்ணாம்பு எலுமிச்சை விலை ரூ. 250 முதல் ரூ. 300 ரூபா வரை உள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, பொதுச் சந்தையில் ஒரு கிலோ எலுமிச்சை ரூ. 400 முதல் ரூ. 500 வரை விற்பனை செய்யப்படுவ தாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு முன்னர் சந்தையில் எலுமிச்சையின் விலை ரூ. 2200 முதல் ரூ. 2600 ரூபாய் வரை இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெத-06)

# மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கடமைகள் பொறுப்பேற்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பிறந்துள்ள 2024 புத்தாண்டில் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சத்திய பிரமாணம் செய்து கடமைகளை ஆரம்பித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ எதிரிமான வின் தலைமையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் நடைபெற்றது.

தேசிய கொடி ஏற்றியதை தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு உயிர் நீத்த படையினர் பொலிசாருக்காக இரு நிமிட மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைமையக பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு புத்தாண்டில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# இராணுவ லெப்டினன்ட் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த இராணுவ லெப்டினன்ட் ஒருவரை கம்பஹா பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மன்னாரில் உள்ள 143 வது காலாட்படை தலைமையகத்தின் 1 காலாட்படை படைப்பிரிவைச் சேர்ந்த 29 வயதுடைய கம்பஹா கணேமுல்ல கண்டலியத்த என்ற இடத்தை வதிவிடமாகக் கொண்ட இராணுவ லெப்டினன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் இவர் கைது செய்யப்படும் போது இவர்வசம் 120 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இராணுவ லெப்டினன்ட் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை கைது செய்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே அவரிடம் ஐஸ் போதைப் பொருள் இருப்பதை கண்டுபிடிக்க முடிந்தது.

அவர் விடுமுறையில் வீடு திரும்பியபோதே இந்த கைது இடம்பெற்றுள்ளதாகவும், இந்த அதிகாரியின் நடத்தை தொடர்பில் உயர் இராணுவ அதிகாரிகளுக்கு ஏற்கனவே தகவல் கிடைத்திருந்ததாகவும் இது குறித்து உயரதிகாரிகளால் அவர் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரெத-08)






## காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதியில் வெள்ளம்!



(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த சில நாட்களாக பொழிந்த கனமழையையடுத்து காரைதீவு மாவடிப்பள்ளி அம்பாறை பிரதான வீதியில் வெள்ளம் பரவுவதனால், நேற்றும் இன்றும் வாகனங்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணித்தன.

காரைதீவு இராணுவ முகாம் ஊடாக விபுலானந்தா கலாச்சார மண்டபத்திற்கு செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது. அங்கும் பயணிகள் சிரமத்திற்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

காரைதீவு வெள்ளக் காடாக காட்சிளிக்கிறது. குறிப்பாக கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மேலும் காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடற்றொழில் மற்றும் விவசாயமும். மக்களின் அன்றாட வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதி வடிகால்கள் மக்களாலும் பிரதேச சபையினராலும் ஆங்காங்கே சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலான வீடுகளின் வாசல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

## அட்டாளைச்சேனையில் அடை மழை பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்




(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அட்டளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை அட்டாளைச்சேனை பிதேச செயலாளர் குழுவினர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டனர்.

பாலமுனை இளைஞர்கள் சபையினர் பாலமுனை பிரதேசத்தில் அடை மழையால் பாதிக்கப்பட்ட வளவுகள், வீதிகள், வடிகான்கள் மற்றும் வீடுகளுக்குள் தேங்கிய வெள்ளநீரினை வழிந்தோட செய்யும் பொருட்டு களப் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2024 இல் வெளியிடப்பெற்றது.